# தந்தை எனும் விந்தை



அமரர்

# மயில்வாகனம் சிவானந்தன்

அவர்களின்

## 31ம் நாள் நினைவுப் பெட்டகம்

## 10.12.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நல்வாழ்விற்கும்,
வளர்ச்சிக்கும் தன்னையே
மெழுகாய் உருக்கி ஆலமரமென எமக்கு
உறுதுணையாய் இருந்து எமையெல்லாம்
அன்போடும், பண்போடும், பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி, நற்கல்வி ஊட்டி
சீரும் சிறப்புடன் வாழவைத்து, மனிதருள்
மாணிக்கமாய், எந்நாளும் இன்முகத்தினராக
குணமெனும் குன்றேறி நின்றே குடும்பத்தின்
தலைவனாய் அன்புக்கணவராய் பாசமிகு
தந்தையாய், அன்பு மாமனாராய், பாசமிகு
அம்மப்பாவாக இன்புடன் வாழ நற்பணிகள்
காத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த,
எங்கள் உள்ளத்தில் என்றும் நீங்கா
ஒளியாகத் திகழும் எங்கள் அன்புத்
தெய்வத்தின் பாதக்கமலத்திற்கு இவ்வினிய
மலரை காணிக்கையாக்குகின்றோம்.

**என்றும் உங்களை மறவாத**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# 31 ம் நாள் நினைவஞ்சலி

மண் மகிழ

1963

09

13



கண் நெகிழ

2022

11

10

# அமரர். மயில்வாகனம் சிவானந்தன்

(ஓய்வு பெற்ற மின்சாரகன் - காகித ஆலை, வாழைச்சேனை)

## திதிவெண்பா

சீர்மிகு சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் இருபத்துநான்காம் நாள்
அபரபக்க துதியை திதியில் ரோகினி நட்சத்திரத்தில் குருவாரத்தில்
10.11.2022, மயில்வாகனம் சிவானந்தன் எனும் கோமகனார்
சிவபதம் சேர்ந்தார் கேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பஞ்சபுராண தோத்திரப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

எண்ணுகே னென்சொல்லி யெண்ணு கேனோ
எம் பெருமான் நிருவடியே யெண்ணி னல்லால்
கண்ணில்லேன் மற்றோர் களைகண் ணில்லேன்
கழலடியே கைதொழுது காணி னல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்
துன்விரை யார் கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே

## திருவிசைப்பா

இடர்கெடுந் தென்னை யாண்டு கொண்டென்னுள்
இருட் பிழம்பற எறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மாலறியாமைப்
படரொளி பரப்பி பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரன் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு
உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின்
கீழ் இருக்க என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்.மயில்வாகனம் சிவானந்தன் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

இயற்கை எழில் நிறைந்த மீன்பாடும் தேனாடாம் மட்டுமாநகரின் கிழக்கே வங்கக்கடலும் மேற்கே மட்டுவாவியும் அமையப்பெற்ற முத்தமிழ் வித்தகன் விபுலானந்தன் பொற்பாதம் பட்டபதியாம் கல்லடி - உப்போடை எனும் எழில்மிகு கிராமத்தில் சித்திவிநாயகர் மற்றும் பேச்சியம்மன் துணைகொண்டு இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்த மயில்வாகனம், சிவராணி தம்பதியினருக்கு சிரேஸ்ட புதல்வனாக 1963ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13ம் திகதி புனர்பூச நட்சத்திரத்தில் அவதரித்தார். இவருக்கு ஒரு அக்காவும் (வசந்தி), இரு தங்கைகளும் (ஆனந்தி, ஜெயந்தி), ஒரு தம்பியும் (சுவேந்திரா) சகோதரர்களாவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை மட்/விவேகானந்தா மகளீர் கல்லூரியிலும், தனது தந்தையின் தொழில் நிமித்த இடமாற்றம் காரணமாக தரம் 6,7 மற்றும் 8ம் கல்வியாண்டினை வட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்திலும், பின்பு தனது இடைநிலைக்கல்வியையும் உயர்கல்வியையும் மட்/சிவானந்தா தேசிய பாடசாலையிலும் கற்று சிறந்து விளங்கினார். அதன் பின்பு தந்தையின் தொழில்மீது இருந்த பற்றுதல் காரணமாக, தனது மேற்படிப்பை சம்மாந்துறை, தொழில்நுட்ப கல்லூரியில் பூர்த்தி செய்து தன்னை ஒரு மின்சாரகனாக எழுச்சியுறச்செய்தார்.

தனது 22வது வயதில் வாழைச்சேனை தேசிய காகிதாதி தொழிற்சாலையில் மின்சாரகனாக சுமார் 19 வருடங்கள் (1984 - 2003) வரை தன்னால் இயன்ற பணியினைச்செய்து உற்பத்தி வினைத்திறன் தடைப்படாது உழைத்தார். இக்காலகட்டத்தில் 1993.07.10 அன்று கல்லடி - உப்போடையில் வசித்த சிவமார்க்கண்டு - சூரியகுமாரி தம்பதியினரது ஏக புதல்வியாம் சுஜானி அவர்களை காதலித்துக் கரம் பற்றிக்கொண்டார். தனது இல்லற வாழ்வில் இணைபிரியாது, இரண்டறக்கலந்து, இன்பமாக இனிமையாக வாழ்ந்த இவர் 1994ல் அபிதாஞ்ஷனி, 1998ல் அபியவாஸ்கர் எனும் இரு செல்வங்களுக்குத் தந்தையானார்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க, உள்ளத்தில் அன்பும், செயலிலே அறநெறி கடவாமையும், வாக்கிலே தூய்மையும், கனத்த குரலுமாய் அமைந்த இவரது வாழ்க்கை.

இவ் இனிய வாழ்க்கைப் பயணத்திலே தனது மனைவியின் மருத்துவ பரிசோதனைக்காக தலைநகர் சென்று வருகையில் கடந்த 16. 09. 2006ம் ஆண்டு கோட்டை புகையிரத நிலையத்தில் ஏற்பட்ட விபத்தில் தனது இரு கால்களையும் இழந்து உயிர்தப்பினார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் 03 மாத சிகிச்சைக்கு பின்னர் வீடு திரும்பினார்.

ஒரு மனிதருக்கு தனது வாழ்வு காலத்தில் நம்பிக்கை மற்றும் தைரியம் இருக்கும். ஆனால் இவருக்கு இருந்த நம்பிக்கையும் தைரியமும் அளப்பெரியதும் அசாத்தியமானதுமாகும். தனது இரு கால்களையும் இழந்த நிலைமையிலும் பொய்க்கால் பூட்டி 4 மாத கால இடைவேளையில் மோட்டார் சைக்கிளில் வலம் வந்தார். இவரின் இச்செயலானது எமக்கு கண்ணதாசனது "தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ உங்கள் அங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் அன்பு குறைவதுண்டோ" இப்பாடல் வரிகளே நினைவூட்டும்.

தான் இருகால்களையும் இழந்தாலும் தன் இரு மகப்பேறுகளையும் தன் காலுக்கு நிகரான தூணாக மாற்ற திடங்கொண்டு தன் பிள்ளைகளுக்கு கல்விச் செல்வத்தை குறைவின்றி வழங்கினார். இவரின் முயற்சியின் பயனாக தன் மகளை ஆரம்பகல்வி முதல் உயர்கல்வி வரை மட்/ விவேகானந்தா மகளீர் கல்லூரியிலும் பட்டப்படிப்பை விஞ்ஞானமானி - சிறப்புப்பட்டம் (தாவரவியல்) துறையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்து முடித்து விவசாய இராஜாங்க அமைச்சு- தேசிய உரச்செயலகத்தில் பணிபுரிந்து வருகின்றார். இதே போல்தன் மகனை ஆரம்பகல்வி முதல் உயர்கல்வி வரை சிவானந்தா தேசிய பாடசாலையிலும் பட்டப்படிப்பை மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் வசதிகள் முகாமைத்துவப் பிரிவில் 4ம் வருடம் படித்து வருகின்றார். தன் பிள்ளைகளின் கல்வியில் அக்கறை கொண்ட காலத்தில் தன் இயலாமையை பற்றி எண்ணாது சுயதொழில் மூலம் பல மின் மோட்டர்களுக்கு புத்துயிர் கொடுத்தார். மின் இணைப்பு, மின் சீராக்கல் துறையில் இவரின் திறமைக்கு நிகர் இவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாழ்க்கைப் பயணத்தில் அயராது உழைத்த காலத்தில் தனது இதய அடைப்பு காரணமாக 2017ம் ஆண்டு பங்குனி மாதம் 16ம் திகதி திறந்த இதய அறுவைச் சிகிச்சையினை வெற்றிகரமாக முகங்கொடுத்து நோயிலிருந்து விடுபட்டு புத்துயிர் பெற்றார். அதன் பின் தன் பிள்ளைகளுள் மகளை கதிரவெளியைச் சேர்ந்த திரு. திருமதி. சிறிஸ்கந்தராஜா - உதயகலா தம்பதியினரது சிரேஸ்ட மகனான கிருஸ்ணரூபனை 2020ம் ஆண்டு புரட்டாதி 06ம் திகதி திருமணம் செய்து தம்பதியினர்களாக மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார். இவர்களின் இல்வாழ்க்கையின் பேறாக "வேதுஷா" எனும் பெண்குழந்தை 2021. 07. 08ம் திகதி பெற்றனர். இதே போல் தன் மகனை புதுக்குடியிருப்பை சேர்ந்த திரு. திருமதி. தனபாலசிங்கம் மஞ்சுளாதேவி தம்பதியினரது இளைய மகளான பௌசியா எனும் பெண்ணை மணம்முடிக்க நிச்சயம் செய்து இருந்துள்ளார்.

தனது செல்லப் பேத்தி தான் தன் உலகம் என அவளுடன் மழலையாக மாறி 24 மணிநேரமும் அவளுடன் கொஞ்சிப்பேசி, மழலை மொழி பழகி அவளுடன் விளையாடி தூங்கி மகிழ்ந்தார்.

இவ்வாறு மனைவி, மகள், மகன், மருமக்கள் மற்றும் செல்லப்பேத்தியுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து மகனின் பட்டமளிப்பு விழாவிற்காக காத்துக்கொண்டிருந்த போது மூச்சு சிரமம் காரணமாக, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் 09. 11. 2022ம் ஆண்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளையில் இரத்தத்தில் பொட்டாசியம் கூடியதன் காரணமாக, இரத்த சுத்திகரிப்பு சிகிச்சையின் பின் ஏற்பட்ட மாரடைப்பில் 10. 11. 2022 இப் பூவுலகை விட்டு நிரந்தர உறக்கம் செய்யச் சென்றார். இவரது பூதவுடல் அவரது இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு 11. 11. 2022 வெள்ளிக்கிழமை இறுதிக்கிரியைகள் வீட்டில் இடம்பெற்று கல்லடி - உப்போடை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறைவனோடு இரண்டறக் கலந்த எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப்பிரிந்தாலும், எப்போதும் எங்களை வாழ்த்தி வழிநடத்திக் கொண்டிருப்பார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

ஆசிரியர் ஔவையார்

விநாயகர் அகவல் என்பது இந்து தெய்வமான கணேஷின் பக்தி கவிதை. இது 10 ஆம் நூற்றாண்டில் சோழ வம்சத்தின் போது தமிழ் கவிஞர் ஔவையார் இறப்பதற்கு சற்று முன்பு எழுதப்பட்டது. இது அவரது மிகப்பெரிய கவிதை என்று கருதப்படுகிறது. இந்து ஆன்மீக நம்பிக்கை மற்றும் நடைமுறை பற்றிய அகவலின் விளக்கத்தையும் தெய்வத்திற்குக் காரணமான மனித வாழ்வின் போதனைகளின் அம்சங்களையும் பயன்படுத்துகிறது.

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!
ஓம் விக்ன விநாயகா போற்றி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கற் செய்தி

கல்லடி உப்போடை, விபுலானந்தா வீதி, முத்தி விநாயகர் கோயிலுக்கு மிக அருகாமையில் வாழ்ந்து வந்த மயில்வாகனம் சிவானந்த அண்ணனின் மறைவு செய்தி கேட்டு நான் மிக மனவேதனை அடைந்தேன். அவரை போன்ற துணிச்சல்மிக்க மனிதரை பார்ப்பதே அரிது. பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட ரயில் விபத்தில் தனது இரண்டு கால்களையும் இழந்தது மட்டும் அல்லாமல் மருத்துவ ரீதியாக ஏற்பட்ட துன்பங்களையும் கடந்து சுகம் பெற்று வீடு திரும்பி மனைவி பிள்ளைகளின் கண்ணீரை துடைத்து என்னால் எதையும் சாதிக்கமுடியும் என நினைத்து இரண்டு செயற்கை கால்களை பொருத்தி நடந்துகாட்டியதோடு மோட்டார் சைக்கிள் ஓடி தனது அன்றாட வேலைகளை திறம்படச் செய்தார். தான் இருக்கின்ற இடத்தில் ஏற்படுகின்ற நல்ல கெட்ட நிகழ்வுகளிலும் தனது துணைவியோடு கலந்து கொள்வார். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் கூற்றுக்கிணங்க வாழ்ந்து அனைவருக்கும் தன்னம்பிக்கையும், தைரியமும் சொல்லி கொடுத்தவர். ஆலய நிகழ்வுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். அவருடைய இழப்பு தாங்க முடியாத மனவேதனையை மனைவி பிள்ளைகளுக்கு கொடுத்துள்ளது. இருந்தாலும் நாங்கள் அனைவருமே என்றோ ஒருநாள் மறையத்தான் போகின்றோம் என்று எங்கள் மனதைத் தேற்றிக்கொள்வோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முத்தி விநாயகர் பாதம் போற்றி வணங்குகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**சிவஸ்ரீ.சி.குகநாத சர்மா குருக்கள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை மனைவியின் அஞ்சலி

காதலித்து கரம் பற்றி ஆசை மொழி பல பேசி
அழகாய் இரு மழலைச் செல்வம் பெற்று
இறைவன் விதியுடன் சேர்ந்து நடத்திய
விளையாட்டில் இருவருமாய் கைகோர்த்து
மதியால் வென்று, இரு செல்வங்களுக்கும்
பல்கலைக்கழகம் வரை கல்விச் செல்வத்தை
கொடுத்து, மகளுக்கு நல்மருமகனை மணம்முடித்து
வம்சகுலமகள் எனும் செல்லப்பேத்தியையும் கொஞ்சி
கதைபேசி வேடிக்கைகள் பல காட்டி விளையாடி மகிழ்ந்து
மகனுக்கும் மணமகளை பார்த்து முடித்து
ஆறுதல் வார்த்தை கூறி என்னை அரவணைத்த
என் அன்புத் தெய்வமே இன்று நீங்கள் எங்கு சென்றீர்?

உன்னை பிரிந்த நொடியை நினைக்கையில் என் நெஞ்சம்
பிளக்கின்றது அத்தான்
எத்தனை ஆறுதல் வார்த்தை கூறி தேற்றினாலும் என்
நிலைக்கண்ணாடி நீங்கள் அல்லவா? அவை
அனைத்தும் உங்கள் பாசத்திற்கு ஈடாகாது என் செல்லமே
உங்கள் பாசத்தின் உச்சங்களான பிள்ளைகளுக்காக
நீங்கள் எனக்கு விட்டுச்சென்ற பெரும் கடமையை
நிறைவேற்றி உங்கள் ஆத்மா சாந்தியடையச்செய்து
உங்களுடன் மீண்டும் சேர்ந்து வாழ காத்திருக்கும்
உங்கள் அன்பு மனைவி நான்

என்றும் உங்கள்
அன்பு மனைவியான
**சூட்டி (சுஜானி)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா! (My Real Hero)

கை பிடித்து நடக்கச் சொல்லிக் கொடுத்தாய்,
என் பிஞ்சு விரல் பிடித்து எழுதச் சொல்லிக் கொடுத்தாய்,
நாவில் எழுத்துக் கூட்டி மும்மொழியும் முன்பள்ளி முதல்
பல்கலைக்கழகம் வரை படிக்கச் சொல்லிக் கொடுத்தாய்,
பெண்ணாய் பிறந்தாலும் தலைமகன் போல் சிறகு விரித்து
பறக்க சொல்லிக் கொடுத்தாய்

என் இல்லறம் சிறக்க நற்கணவனை தேர்ந்து கொடுத்தாய்,
நான் தாயாகிய தருணத்திலும் என்னை சேயாக்கி என் சேய்க்கு
உன்னை தாயாக்கி வளர்த்துக் கொடுத்தாய்
ஆனால், இன்று நீ இல்லாத உலகில் எப்படி வாழவேண்டும்
என்று சொல்லாமல் சென்றதேனோ? என் தெய்வமே

I Can't touch you anymore, Can't here you, Can't see you but I Can feel you all the time because you are alive in my heart. My dad we will meet again one day.

Love you appa



Always love
with your daughter
**Abithanchani**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மாமா

மாசற்ற குணமுடைய மாமாவே
உங்களின் சேவைகளின் எண்ணற்ற விடயங்களை
காகிதத்தில் எழுதி விடமுடியாது
உங்கள் குடும்பத்தில் நீங்கள் என்னை மருமகனாகவும்
உங்கள் மகளுக்கு மணாளனாகவும் வாழ வைத்த நீங்கள்
உங்கள் கடமைகள் முடியமுன்னர் சென்றுவிட்டீர்கள் மாமா
உங்களை மறக்க முடியவில்லை
நான் உங்களோடு வாழ்ந்த இந்த 3 வருட வாழ்க்கையில்
உங்கள் மகளை எனக்கு வாழ்க்கைத் துணையாக்கி எங்கள் இல்லறம்
சிறக்க உதவி என் மகளான உங்கள் பேத்தியையும் நல்லமுறையில்
வளர்த்து நின்ற நீங்கள் இன்று எங்களை விட்டு தெய்வமாகி விட்டீர்கள்
உங்களை எங்கள் குடும்பத்தில் சிறந்த ஆசானாக போற்றுகிறோம்
மாமா,
உங்களின் இந்த இழப்பை எங்களால் ஈடு செய்ய முடியாது மாமா
இனி வரும் காலங்களில் எங்கள் குடும்பத்தில் நிகழும் எல்லா காரியங்களிலும் தெய்வமாக நின்று எங்களையும் சிறந்த முறையில் வழி நடத்துவீர்கள் என முழுமையாக நம்புகிறோம்.

அன்பு மருமகன்
**கிருஸ்ணரூபன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மப்பா நீயெங்கே?

ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு
அரவணைக்க அன்பான உள்ளங்கள் உண்டு
ஆனாலும் செல்லமாய் அம்மப்பா என அழைத்து
நான் கொஞ்சி விளையாட நீங்கள் இல்லை
என்னை தனியே விளையாட, பாட்டுக்கேட்க வைத்து விட்டு
எங்கே போனீர்கள் என் செல்ல அம்மப்பா

என்றும் உங்கள்
செல்லப்பேத்தி
**கி.வேதுஷா**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னை உயர்த்திட்ட தெய்வமே!

அவனிக்கே எனை அறிமுகம் செய்த அப்பா
ஆண்டவன் சித்தத்தில் மறைந்தீரே - பல
இன்னல்கள் வந்தபோதும் என்னை
ஈடு இணை இன்றி வளத்தீரே அப்பா

உறவுகள் பல கொண்டீரே அப்பா
ஊரெல்லாம் உன் புகழை விதைத்தீரே
எக்குறையும் இல்லாமல் - என்னை
ஏணியென நின்று உயர்த்தினீரே அப்பா

ஐயம் என்பது உனக்கில்லை - பிறர் குறை
ஒன்றும் நீர் கண்டதில்லை அப்பா
ஓராயிரம் பிணிகள் உனை சூழ்ந்தாலும்
ஔடதம் உண்டு வெல்வீரே அப்பா

கனாக்கள் பல கண்டீரே - இனி
காண முடியாத தூரம் சென்றீரே அப்பா
கிண்டல் பல செய்வீரே - பெரும்
கீர்த்தியுடன் வாழ்ந்து காட்டினீரே அப்பா

குருவி கூடாக வாழ்ந்த எம்மை - காலன்
கூட்டை உடைத்து அழைத்தானோ அப்பா
கெட்ட சொல் நீ கூறி இதுவரை - நாங்கள்
கேட்டதே இல்லையே அப்பா

கொடுமை பல செய்வோரைக் கூட
கோபம் கொள்ளாமல் ஆதரிப்பீரே அப்பா - இன்று
கை கூப்பி வணங்குகிறோம் உங்கள்
ஆத்மா சாந்திக்காக

அன்பு மறவாத செல்ல மகன்
**சி.அபியவாஸ்கர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவுகள் ஆயிரம் சுமந்திட்ட மாமா!

நல்மனம் கொண்ட உங்களை
கல்மனம் கொண்ட காலனவன்
அழைத்தானோ மாமா

பாரினிலே நீங்கள் கற்ற பாடங்கள்
ஆயிரம் - வாழ்க்கைப் பாதையிலே நீங்கள்
அறிந்த அனுபவங்கள் பலநூறாயிரம் மாமா

ஒரு நாளில் பத்து முறையேனும்
நீங்கள் உச்சரிக்கும் என்பெயர் - இன்று
இலக்கணம் இல்லாமல் ஆனதே மாமா

தந்தை அன்பை தந்த நீங்கள்
ஏனோ இன்று - தாங்கா
துயர் தந்து சென்றீர்கள் மாமா

பயமுறுத்தும் உங்கள் குரல்
கேட்க முடியாமல் - பதறுகிறதே
என் நெஞ்சம் மாமா

ஆச்சரியம் காட்டி ஆனந்தம் செய்யும்
நீங்களா இன்று அலையாய் கண்ணீர்
வரச் செய்தீர்கள் மாமா

கனவுகள் ஆயிரம் சுமந்தீர்களே
காலனவன் என்னை கரம்பிடித்து கொடுக்க
விடாமலே அழைத்தானோ மாமா

மகளாக நினைத்தீர்களே என்னை
மனமுருகி அழைக்கிறேன் மறுபடியும்
வாருங்கள் மாமா இவ்வுலகிற்கு

உங்கள் மருமகள்
**பெளசியா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அருமை மருமகனே!

உனது ஆத்மா சாந்திபெற இனிய சிவதந்தையை நினைக்கின்றேன்.

எங்கள் குலத்து இனியவனே! நீங்கள் இருவரும் விரும்பியபடி சீர் சிறப்பான நல்வாழ்வை அமைத்துத் தந்தோம். மனைவி இரு மக்களுடனும் சிறப்பாக வாழ்ந்து வரும் வேளையில் விதியின் விளையாட்டில் சதியாய் போனதே. கால்கள் இரண்டும் இழந்தபோது, இழப்பது அனைத்தும் தோல்வி அல்ல காலத்தின் கட்டாயம். அடைவது அனைத்தும் வெற்றி அல்ல தோல்வி அனைத்தும் தோல்வியும் இல்லை என்பதை உலகுக்கே வீறுநடைபோட்டு வாழ்ந்து காட்டிய நீ. முத்தானது பிறப்பு எடுப்பதற்கு சிப்பியானது உடையவே வேண்டும். உனது மனத்தைரியம் வாழ்க்கை எனும் பூங்காவனத் தோப்புக்குள்ளே பவனிவந்ததையா. என்னதான் நோய் துன்பம் இடுக்கண் வந்தாலும் தைரியமாக மனைவி மக்களுடன் வாழ்ந்து வந்தாய். எனது மகளும் உனக்கு மனைவியாக தாயாக மனம்தளராமல் உன்னை அன்புடன் கவனித்துப் பார்த்தவளை அவசரமாக பிரிந்தது என்ன?

காதலுக்கு கன்னி மகள், வாழ்க்கைக்கு திருமகள், உங்கள் கடமைகள் செய்வதில் பெருமகள், தன் இரு மக்களையும் வளர்த்து சான்றோர்கள் ஆக்கியதில் அவள் ஒரு தனித்துவமான ஆசான். என் மகளுக்கு வந்ததுன்பங்கள் துயரங்களை தைரியமாக நின்று ஏற்று வாழ்ந்தவள். காற்றுக்கென்ன வேலி, கடலுக்கு என்ன மூடி என்பதைப் போல் தற்போது கணவனை நினைத்து நினைத்து கலங்கினாலும் தைரியமாக எதையும் சகித்து வாழ்பவள் என்பதை என் மகளின் துயர் கண்டு கலங்கி அழும் பெற்றோர்கள்.

சொந்தங்கள் வேதனையை தேடியதே,<br>
விதியாடும் விளையாட்டில் சதியில் விழுந்தனதே,<br>
சொந்தம் பந்தம் பலியானதே,<br>
அதர்மம் இங்கு வெற்றியை பற்றியதே....

உன் பிரிவில் துயர்கூறும், உனது மாமியின் கலக்கங்கள்

சி.சூரியகுமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிஜத்தின் நிசப்தத்தோடு...

நல்லதெல்லாம் கல்லாமல் நில்லாது
நினைக்க நினைப்பதெல்லாம் நிலையான நிசப்தமாக - மாமா
விழி தொட முடியாத தொலைவிலிருந்து
விபரிக்க முடியாத மறைவாக - ஒரு நொடிப்பொழுதில்
கனவின் படிமமாய் நிழலான உறவே!

சோதனையும் வேதனையும் எந்தனுக்குப் பொருட்டல்ல
சோர்ந்து விடாமல் வாழ்வது மேல் எனும் - நீங்கள்
சோர்வு காட்டாமல் எமைவிட்டு சென்றனையோ தனியாய்!

என் தாயின் மூலம் அறிந்த நால்வரில் முதல் உறவு
தந்தையின் பின் இருக்கும் எண்ணிய உறவும் மாமா
இழப்பதற்கு மட்டும் வருந்த வேண்டுமெனில் - இந்த
வாழ்க்கையின் இழப்புக்கள் தான் ஏராளம்
நிதர்சனம் ஆக்கிய உறவும் நீங்கள்!

இருந்தும் அமைதியடைகிறோம் - வம்சத்தின் முதல்
பிஞ்சு மழலை குரலில் தன்னை முழுமையாக சங்கமித்து
மறைந்துவிட்டீர்கள் - உணர்கிறோம்
வாழ்நாள் முழுவதும் எங்கள் நெஞ்சுதனில்....
உங்கள் ஆத்மா இறையடி கலந்திட
இரு வழி சேர விடை தருகின்றோம்.

மருமகள்
**சரண்யா கேசவராஜா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவுப் பூக்கள்

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்

உம் ஞாபக அலையாலே
வெதும்பி நாம் அழுகின்றோம்
வேதனையில் தவிக்கின்றோம்
உம் ஒளிமுகத்தை முன்நிறுத்தி

எம் குடும்ப ஒளிவிளக்கே
உம் பிரிவால் உறைந்தோமே
பெரு வெளியாய் உள்ளதுவே
உமக்கான இடம்தானே

உறவுக்கு உறைவிடம் நீர்
இதை உம் சிந்தனையில் கண்டோமே
தன்னலமற்ற ஈசனே - இறைவன்
மலரடி பறந்தாயோ கடுகதியே!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
பல வழிகள் முன்னோக்கி காட்டினீரே
இன்பங்கள் இரட்டிப்பாகும்
துன்பங்கள் தூரவிலகும்
துணையாய் நீங்கள் இருந்தபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் அழைப்புக்கு இணைந்து
இசைந்து சென்றுவிட்டீர்
இல்லமது இருட்டாய் போனது
இதை நீங்கள் உணர்ந்திருப்பீர்

அண்ணன் என்ற அரும்பாசம்
அகிலத்தில் எமக்குத் தந்தீர்
மக்களுக்கு மாமாவாய்
மனதார வாழ்த்தி நின்றீர்

நாங்கள் நன்றாய் வாழ்ந்திட
நீங்கள் துணை இருப்பீர்கள் என்ற
நம்பிக்கையில் நாங்கள் வாழ்கின்றோம்
தங்கள் ஆத்மா சாந்திபெற
எல்லாம் வல்ல இறைவனையே
வேண்டுகின்றோம்

சாந்தி சாந்தி சாந்தி

துயருறும் தம்பி
**க.ஜெயகுமார்**
**குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரத்துவம் அடைந்த அமரர் மயில்வாகனம் சிவானந்தன் அவர்களின் பிரிவுத் துயர் பகிரும் இரங்கற் பா...!

கணப்பொழுதில் காலனவன் உன்னுயிர் கவர்ந்த சேதிதனை
ஏற்க மறுக்கின்றது எம்மனங்கள் என்செய்வோம்?
மர்மங்கள் நிறைந்த மாய வாழ்வின் முடிவுதனை
மறுக்கத்தான் முடியுமோ? வையத்து வாழ் மாந்தர்கள் நாம்

உற்றாரும் உறவுகளும் சுற்றத்தாரும் உத்தமன் என உனைப்போற்ற
இம்மண்ணில் நீ நகர்ந்த சுவடுகள் என்றும் அழியாதையா!
வாழ்வில் எதிர்கொண்ட இடர்கண்டும் சோர்ந்திடாது எழுந்து நின்றாய்
உன்மூச்சு உடலைப் பிரியும்வரை உழைத்து உத்தமனாய் குடி செய்தாய்

பண்பு நிறைந்த உன் மனையாளுக்கு ஏற்ற துணைவனாய் நீ அமைந்தாய்
கரம்பற்றியவள் துளியேனும் கலங்கிடாது காலமெல்லாம் காத்து நின்றாய்
இல்வாழ்வானுக்குரிய அனைத்துப் பண்பும் அமையப்பெற்று
அன்பும் அறனும் பெருகிடவே இல்லறம் இயற்றி மகிழ்ந்திருந்தாய்


இல்லற வாழ்வின் நன்கலமாய் இரண்டு மகவுகளை ஈன்றெடுத்தாய்
ஈன்ற பிள்ளையை சான்றோனாக்கும் உயரிய கடமையில் பின்போகாது
பாசமிகு தந்தையாய் அமைந்து நாளும் பணிவிடைகள் பல செய்தாய்
இம்மேதினிலே அவர்கள் உயர்வு கண்டு இன்பப் பெருக்கில் மூழ்கி நின்றாய்

நாவடக்கம் மிகுந்த நல்லவனாய் வாழ்ந்தவன் நீ
காலனவன் கயிற்றில் கட்டுண்டு இமைப்பொழுதில் எமைப் பிரிந்தாய்
இப் பொய்யுலக வாழ்வை விடுத்து இறையுலகம் நாடிய உன் ஆன்மா
அரனடியில் நித்திய இன்பம்பெற இரஞ்சுகின்றோம் எம் இறையை!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

**அன்னாரின் பிரிவால் துயருறும் கமநல அபிவிருத்திப் பிரதி ஆணையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், கமநல அபிவிருத்தித் திணைக்களம், மட்டக்களப்பு.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழைச்சேனை காகிதஆலையில் மின்சாரகனாக கடமை புரியும் வேளையில்.



தனது தாய், தந்தையருடன்.



புதுமனை புகு விழாவின் போது.



காதலித்து கரம் பற்றிய போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தன் சகோதரிகளுடன்.



மகளின் 1வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது.



மகனின் 1வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளின் பூப்புனித நீராட்டு விழாவின் போது.



தனது மனைவியின் குடும்பத்தாருடன்.



மகனின் 10வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவானந்தனின் குடும்பம்



மகன் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானமைக்கான கௌரவிப்பு விழாவின் போது.



தனது 25வது திருமணநாள் கொண்டாட்டத்தின் போது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது 25வது திருமணநாள் கொண்டாட்டத்தின் போது.



மகளின் திருமண நிகழ்வின் போது.



மகளின் திருமண நிகழ்வின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெகு விமர்சையாக கொண்டாடிய 57வது பிறந்தநாள்.



மகளின் பட்டமளிப்பு விழாவின் போது.



தன் பேத்தியுடன் கொண்டாடிய இறுதி பிறந்தநாள்.




பேத்தியின் மருங்கை நிகழ்வின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பேத்தியின் 1வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது.



தன் குடும்பத்தாருடன் பேத்தியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது.




இறுதியாக கலந்து கொண்ட 01.11.2022 பிறந்தநாள் கொண்டாட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 13 | | 10 |
| 09 |  | 11 |
| 1963 | | 2022 |

# அமரர். மயில்வாகனம் சிவானந்தன்

(ஓய்வு பெற்ற மின்சாரகன் - காகிதஆலை வாழைச்சேனை)

மட்டக்களப்பு கல்லடி உப்போடையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட, அன்னார் 10.11.2022 வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் **சுஜாணியின்** அன்புக் கணவரும்,

காலஞ்சென்ற **மயில்வாகனம், சிவராணி** ஆகியோரின் பாசமிகு மகனும்,

**சிவமார்க்கண்டு,** ஆரியகுமாரி ஆகியோரின் பாசமிகு மருமகனும்,

**அபிராஞ்சனி** (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தேசிய உரச்செயலகம்)
**அபிவனாஸ்கர்** (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

**திருவருபன்** (செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் - World Vision -Thaayin care)
**பௌசியா** (நிர்வாக உத்தியோகத்தர் - Adrian Solar Pvt) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

**வேதுஷாவின்** பாசமிகு அப்பப்பாவும்,
**சாந்தி, ஆனந்தி, ஜெயந்தி, சுவேந்திரா** (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

**சுஜாகரன்** (ஆசிரியர் மட்/ சிவானந்தா தேசிய பாடசாலை, **சுஜாத்** (மலேசியா) காலஞ்சென்ற **வேணுராஜா, செல்வநாயகம்** ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

**அனுசியா** (பிரதேச செயலகம் ஆரையம்பதி) **லாவண்ப்ரியா** (மலேசியா), ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும்,

**சரண்யா** (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் மண்முனை வடக்கு)
**வித்தியாகன் அனுத்திரா, ஸ்ரீநிரஞ்சனா** ஆகியோரின் மாமனாரும் ஆவார்.


**அன்னாரின் இறுதிக்கிரியை 11.11.2022 வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணிக்கு கல்லடி உப்போடை இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் - குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வம்ச விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

10.11.2022 வியாழக்கிழமை
இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
திரு.மயில்வாகனம் சிவானந்தன்
அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு உடன்
வந்து துயரங்களில் பங்கேற்று பல
வழிகளிலும் பக்கபலமாக இருந்து,
மறுநாள் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில்
கலந்து கொண்டோருக்கும், தொலைபேசி,
தந்தி ஆகியவற்றின் மூலம் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும், சிரமம் கருதாது
எல்லா வகைகளிலும் உதவிகள் பலவும்
புரிந்த உற்றார், உறவினர்களுக்கும்,
நண்பர்களுக்கும் மற்றும் 31ம் நாள்
அந்தியேட்டிக் கிரியைகளில்
இதயபூர்வமாய்க் கலந்து
கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**"அபியகம்"**
**இல.12, விபுலானந்த வீதி,**
**கல்லடி - உப்போடை**
**மட்டக்களப்பு.**
**தொ.பே-0768884593**
**0756800754**

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

10.11.2022 வியாழக்கிழமை
இறைவனடிக் கலந்த அமரர் செல்லர்
சிதம்பரநாதன் சிவானந்தன்
அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு உடன்
வந்து ஆறுதல் பகிர்ந்து, பல
வழிகளிலும் பக்கபலமாக இருந்து,
மறுநாள் நடைபெற்ற இறுதிக்கிரியையில்
கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி,
மின் அஞ்சல்கள் மூலம் அனுதாபம்
தெரிவித்தவர்களுக்கும், மரண அறிவித்தல்
ஏனைய வகைகளிலும் உதவிகள் பல
புரிந்த உற்றார், உறவினர்களுக்கும்,
நண்பர்களுக்கும் மற்றும் 31ம் நாள்
அந்தியேட்டிக் கிரியையில்
இரவுணவுக் கலந்து
கொண்டவர்களுக்கும் எமது மனமார்ந்த
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்
அது வீணாகுவதற்கு?
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது, வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

– பகவான் ஸ்ரீ கிருஸ்ணர் –



துர்க்கா அச்சகம்
கொக்குவில்,மட்டக்களப்பு 065 205 3060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org